மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் மாவட்டம்


கொங்கணாபுரம் தேர்வுநிலை பேரூராட்சி

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் பேரூராட்சி / கிராமம், சர்வே.எண் - 239/6B - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லாத பகுதி)

கோப்பு எண் : SLM / FZZW4NPE / 40927 / 2025
இணையதள விண்ணப்பம் எண் : FZZW4NPE
அளவு : 1 : 600

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	:	1.01 ஏக்கர் (அ) 4088.00 ச.மீ.
மனைப்பிரிவு உத்தேச சாலைகளின் பரப்பளவு மூலைமுடக்குகள் உட்பட	:	1105.947 ச.மீ
மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	:	2982.053 ச.மீ
மனைப்பிரிவு எல்லை	.....	
உத்தேச மனைப்பிரிவு சாலை	.....	
நிலையில் உள்ள சாலை	.....	
கோரிய மனைகளின் எண்ணிக்கை	:	18
ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை	:	18



பொது ஒதுக்கீடுகள் : உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டது.

உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பளவு : 1105.947 ச.மீ

அரசானை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 -ன் பூங்கா ஒதுக்கீடு 10% பரப்பளவு இடத்திற்கு, அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையினை அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம் :

A. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனையின் பரப்பளவு (PP1) : 29.96 ச.மீ (1.00%)

B. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனையின் பரப்பளவு (PP2) : 29.96 ச.மீ (1.00%)

மூலை முடக்கு : 7.20மீ அகலம் முதல் 12.00மீ அகலம் வரையுள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்:

1. அரசானை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019 - ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
2. அரசானை எண் 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 31.01.2020 - ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
3. அரசானை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020 - ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும்மின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா - தானப்பத்திரம் - பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லவும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் (BDO/UE) அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின் கம்பி பாதையை உத்தேச சாலையின் போக்கிற்கேற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றியமைத்து கொள்ள வேண்டும்.

APPROVAL NO: SWP/ DTCP /SALEM/LAYOUT NO :186/ 2025

Signature Not Verified
Signed by: Assistant Director
Location: Salem
Date: 2025.06.06 16:13:52

Signature Not Verified
Signed by: Town Planning Officer
Location: Salem
Date: 2025.06.06 12:50:14

கா.துர்க்கேஸ்வரி அளவர் / உதவி வரைவாளர்	ப.முனியண்டன் வரைவாளர் நிலை - III	சு.மோகனா கட்டடக்கலை / திட்ட உதவியாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம் மாவட்டம்